ஹங்குரன்கெத பிரதேச சபை - 2024

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹங்குரன்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹங்குரன்கெத்த பொதுச் சந்தையின் 12 கடைகளிலிருந்து 2019 மார்ச் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை மொத்த வாடகை ரூபா 2,082,800 பட்டியலிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடைமையை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், மேலும் 2019 ஆம் முதல் பட்டியலிடல் நிறுத்தப் பட்டுள்ளதாக. | கடைகளுடன் தொடர்புடைய வாடகையை கணக்கீடு செய்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாணத் திட்டமொன்றிற்காக செலுத்த வேண்டிய ரூபா 612,337 தொகை 2021 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருக்கையில் மேலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முறையான முறையில் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அலுவலக மற்றும் தளபாடங்கள் கொள்வனவு ரூபா 518,556 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இது சீராக்கம் செய்யப்படும் என்பதாக. | அலுவலகம் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் கணினி உபகரணங்களின் கொள்வனவு ரூபா 189,396 குறைவாக மூலதனமாக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | கொள்வனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ஊழியர் கடன் மீதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 338,738 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளை உரிய அட்டவணை மீதிகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

## 1.6.3. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 141,160 கூட்டுத்தொகையான 03 பொறுப்பு விடயங்கள் உரிய உடன் படிக்கைகள்/வேலைகள் நிறைவேற்றப்பட்ட அறிக்கைகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்காமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, தொடர்புடைய தகவல்கள் திருத்தப்படும் என்பதாக. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை பராமரிக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| i | 52 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் இனங் காணப்பட்டிருந்த 54 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வருவதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |
| ii | 93 (ஆ) பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் அனைத்து மலசல கூடங்கள், மற்றும் மலசல குழிகள் என்பவற்றை உரிய கால எல்லைக்குள் முறையாக சுத்திகரிப்பதற்காக கலி வண்டி சேவையொன்று நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடுகள் இல்லையென்பதால் கொள்வனவு செய்வதற்கு இயலுமை என்பதாக. | பொது மக்கள் சேவையை முறையாக பராமரித்துச் செல்லல் வேண்டும். |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | | | |
|---|---|---|---|
| நி.பி. 571(3) | 1998 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான காலப்பகுதிக் குரிய மொத்தம் ரூபா 985,395 ஆன காலாவதியான 18 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | வ்வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,073,995 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 7,029,591 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,864,603 | 13,428,450 | 13,247,583 | 1,335,100 | 4,847,160 | 4,621,751 | 3,950,978 | 1,154,233 |
| (ii) | வாடகை | 5,163,900 | 6,846,524 | 6,922,748 | 2473694 | 7,433,000 | 3,124,423 | 4,356,413 | 2,549,918 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,092,024 | 1,788,470 | 1,788,470 | - | 2,480,000 | 4,545,010 | 3124423 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 33,678,514 | 15,589,535 | 10,624,174 | 13,332,695 | 5,573,500 | 9,333,583 | 3,011,499 | 8,367,334 |
| | | 51,799,041 | 37,652,979 | 32,582,975 | 17,141,489 | 20,333,660 | 21,624,767 | 14,443,313 | 12,071,485 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட வீதவரி நிலுவை ரூபா 632,573 இல் ஆண்டினுள் ரூபா 308,207 அறவிடப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் பட்டியலிடுகையில் ரூபா 634,682 அறவிடப்படாதிருந்தது. அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 70 அலகுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 237,196 ஆன தொகை காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டு ஒரு பகுதி அறவிடப்பட்டிருப்பதுடன், மேலும் இறுதி அறிவிப்பு வழங்கப்படுகின்றமை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 13 கடைகளிலிருந்து ரூபா 2,315,532 கூட்டுத்தொகையான கடை வாடகை மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | 12 கடைகளின் உடமையை கையேற்பதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதாக. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உளளவாறு ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 10,652,100 ஆக இருந்தது. | ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ஹங்குரான்கெத்த பொதுச் சந்தையில் உள்ள 12 கடைகளின் குத்தகைதாரர்களுடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை புதிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த 12 கடைகளிலிருந்து வர்த்தக அனுமதிப் பத்திரங்கள் அல்லது கழிவுப் பொருட்கள் வரிகள் எதுவும் அறவிடப்படவில்லை. மேலும், 2011 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம், கடை வாடகை அறவிடப்படாமை காரணமாக 2011 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 3,962,400 வருமானத்தை இழந்துள்ளது. இது தொடர்பாக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | சட்ட நடை முறைகளை விரைவில் எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சாரதி பயிற்சிக்காக ஒரு பேருந்து நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணத்திலிருந்து திரும்பப் பெற வேண்டிய ரூபா. 100,000 தொகை தீர்க்கப்படவில்லை. | தகவல் கண்டறியப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன்பட்டோர் மீதிகளைத் தொகையை உடனடியாகத் தீர்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிர்மாண கடன்கொடுத்தோர் மீதி ரூபா 12,058,495 ஆக இருந்தது. அதில் 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 796,647 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 70,000 தொகையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்வதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்வு செய்ய வேண்டும். . |
| (இ) | 2020 செப்தம்பர் 20 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மிகை நிதியை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி திகத வரையில் வங்கி நடைமுஐறக் கணக்கில் காணப்பட்ட ரூபா 41,973,896 ஆன மிகைப் பணத்தை சேமிப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இப்பணத்தை sweep கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும் |

## 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | ரிகல்லகஸ்கடையிலுள்ள பழைய பொது வியாபார கடைத்தொகுதியின் 06 கடைகள் 2023 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தாமல் மூடப்பட்டிருந்ததுடன் நகர் மத்தியில் அமைந்துள்ள இக்கடைகள் மற்றும் காணி ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக இருப்பதால், நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் உள்ளதாக. | உரித்தை தெளிவுபடுத்தி, கடைகளை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | ரூபா 328,770 பெறுமதியான 117 நீர் குழாய் உதிரிப் பாகங்கள் பயன்படுத்தப்படாமல் 2008 முதல் 2025 வரை 17 ஆண்டுகளாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. . | எதிர்காலத்தில் புதிய நீர் செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டால் இந்த நீர் குழாய்களை பயன்படுத்தலாம் என்ற எதிர் பார்ப்புடன் பாதுகாப்பாக களஞ்சியப் பட்டுள்ளதாக. | தேவைகள் அடையாளம் காணப்பட்டு, உப பாகங்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குரிய உழவு இயந்திரமொன்று 2022 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு அதிக செலவு மற்றும் நேரம் எடுப்பதால், வாகனமம் மீண்டும் சபைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக. | உழவு இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான சாத்தியம் அடையாளம் காணப்பட்டு, பொருத்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| .ரிகல்லகஸ்கடயிலுள்ள பழைய பொது வியாபார கடைத்தொகுதியின் கடைகளுக்கு அண்மையில் அமைந்துள்ள ஆயுர்வேத கட்டிடம் தற்போது பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தைச் சுற்றி புற்கள் வளர்ந்திருந்தன. இக்கட்டிடத்தை திருத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | உரிய கட்டிடத்தை திருத்தி ஆக்கபூர்வமான செயற்பாடொன் றிற்காக பயன்படுத்த வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 03 பதவிகளில் 37 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 06 மிகைகள் காணப்பட்டன. | தற்போது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையால் தொடர்ந்தும் வெற்றிடங்கள் காணப்படுவதாக. | அத்தியவசிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |